


# மல்டிபர்பஸ் சிப் பவுச் செய்யுங்கள்

இந்த வீடியோவில் ஸிப் வைத்த பவுச் எப்படி தைப்பது என்று பார்க்கலாம். இது பலவிதத்திலும் பயனுள்ளதாக இருக்கும்.



இதற்கு தேவையான பொருட்கள் 13 இன்ச் நீளமுள்ள ஒரு ஸிப். லூப் செய்வதற்கு 6 அல்லது 8 இன்ச் வரை உள்ள ஒரு ரிப்பன். மிஷின் நூல் சுற்றப்பட்ட பாபின். எதாவது ஒரு நிறத்தில் 12 இன்ச்க்கு 11 ½ இன்ச் அளவுள்ள ஒரு துணி.

முதலில் ஸிப்பை எடுத்து துணியின் அகலவாட்டில் நேர்பக்கங்கள் ஒன்றை ஒன்று பார்த்தது போல் வைக்கவும்.

ஸிப்பை பின்களால் துணியின் ஓரத்தில் பிக்ஸ் செய்யவும். ரன்னரால் ஸிப்பை திறந்து கொள்ளவும். துணியின் எதிர்பக்கத்தில் ஸிப்பின் மறுபக்கத்தை வைத்து துணியுடன் சரியாக அலைன் செய்து கொள்ளவும்.

இப்போது மிஷினில் தைக்க போகலாம்.

ஏற்கனவே இருக்கும் யு புட் ஐ எடுத்து விட்டு ஸிப்பர் புட் ஐ மாட்டவும். ஊசியை மேலே தூக்கி விட்டு பிரஷர் புட் ஐ ரிலீஸ் செய்து ஸிப்பர் புட் ஐ சரியாக பொருத்தி விட்டு பிரஷர் புட் லீவரை கீழே இறக்கி பொருத்தவும்.

இப்போது ஸிப்பின் ஒரு பாகத்தை ஸிப்பர் புட்டின் வலது பக்கமாகவும் மீதமுள்ள துணி பாகத்தை உங்களுக்கு வலதுபுறம் இருக்குமாறும் பார்த்துக் கொள்ளவும். நிதானமாக ஸிப்பின் ஓரத்திலேயே தைக்கவும். பின்களை அகற்ற மறக்க வேண்டாம். தைத்து முடிந்ததும் துணியை எடுத்து நூலை கத்தரிக்கவும்.



இப்பொழுது மறுபக்கத்திற்கும் இதே போலவே தைக்கவும்.

தைக்கும் பொழுது துணியில் குத்தியுள்ள பின்களை மறக்காமல் எடுத்து விடவும். இவ்வாறு தைத்த பிறகு, துணியின் இரண்டு ஓரங்களிலும் ஸிப் பொருந்தி இருக்கும். ஸிப்பின் ரன்னரை இழுத்து ஸிப்பை மூடவும். துணியை மடித்து ஸிப்பரை நடுவே கொண்டு வரவும். படத்தில் காட்டியுள்ள படி பின் செய்து கொள்ளவும்.



ரிப்பனை எடுத்து இரண்டு இன்ச் நீளமும் இன்னொரு துண்டை மூன்று இன்ச் நீளமும் இருக்குமாறு கத்தரிக்கவும். இப்போது சிறிய ரிப்பனை மடித்து முனைகளை துணியின் நடுவே வைத்து ஸிப்புக்கு கீழே அலைன் செய்து கொள்ளவும்.
நகராமல் இருக்க பின் செய்து கொள்ளவும். நீளமான ரிப்பனையும் இதே போல் வைத்து எதிர்புறம் ரெடி செய்து கொள்ளவும்.

இப்போது நீங்கள் இரண்டு சைடையும் தைக்கலாம்.

ஊசி மேலே இருக்குமாறு வைத்து ஸிப்பர் புட் ஐ எடுத்து விட்டு யு பிரஷர் புட் ஐ மாற்றவும். ஊசி மேற்புறம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.



ரிவர்ஸ் தையலுடன் ரிப்பன் லூப்புகளை தைத்து விடவும். இரண்டு பக்கமும் இதே போல் தைக்க வேண்டும்.


இனி பக்கவாட்டில் தைப்பது பற்றி பார்க்கலாம். அரை இன்ச் ஓரம் விட்டு நீடில் ப்ளேட்டில் துணியை அலைன் செய்து தைக்க தொடங்கி தையலை லாக் செய்ய வேண்டும். ஸிப்பரின் நுனி வரும் வரை தைக்க வேண்டும். ரிவர்ஸ் தையல் செலக்டரை யுஸ் செய்து தையலை கவனமாக லாக் செய்யுங்கள்.

பிறகு ஊசியை மேலே தூக்கி பிரஷர் புட் ஐ ஸிப்பின் கடினமான பகுதியை விட்டு தாவி மறுபுறம் தைக்க தொடங்கவும். இதே போன்று மற்றொரு பக்கமும் தைக்கவும்.









ஸிப்பை நெருங்கும் போது ஓப்பன் செய்யுங்கள். ஊசியை மேலே தூக்கி விட்டு பிரஷர் புட் தாவி வருமாறு பார்த்துக் கொள்ளுங்கள். இருபுறமும் தையலை லாக் செய்வது அவசியம். நூலை கத்தரித்து விடவும்.

இப்போது ஸிப்பர் பவுச்சின் ஓரங்களை தைத்து விட்டோம். ரிப்பனுக்காக குத்திய பின் மற்றும் ஸிப்புக்காக குத்திய பின் அனைத்தையும் எடுத்து விடலாம்.

படத்தில் காட்டியபடி பவுச்சின் மூலையை அழகாக மடிக்கவும். இதை நன்றாக தட்டை ஆக்கி 1 ½ இன்ச் அளவில் உள்பக்கமாக அளந்து குறித்துக் கொள்ளவும். பிறகு ஒரு நேர்கோட்டை வரையவும். பின் செய்து மடிப்பை தக்க வைத்துக் கொள்ளவேண்டும்.

இதே போல மீதமுள்ள மூன்று கார்னர்களையும் தைக்க வேண்டும். அதற்கு அனைத்து கார்னர்களையும் மார்க் செய்த பின்னர் பின் செய்து கொள்ளவும்.

மார்க் செய்த சைடை பிரஷர் புட்க்கு அடியில் வைத்து பேட்டர்ன் செலக்டரை யு விலும் தையல் நீளத்தை 2 க்கும் 3 க்கும் நடுவில் வைக்கவும். தையலை லாக் செய்து லைன் மேலேயே தைக்கத் தொடங்கவும். தைத்து முடித்த உடன் மிஷினை நிறுத்தி துணியை எடுக்கவும்.

வீடியோவில் காட்டியவாறு நான்கு கார்னரையும் தைக்கவும். நான்கு கார்னர்களிலும் தையலை லாக் செய்ய மறக்காதீர்கள்.

பின்களை அகற்றி கால் இன்ச்க்கு இடம் விட்டு கட் செய்யவும். மற்ற மூன்று கார்னர்களிலும் இதே போல் செய்யவும். ஸிப் கூடுதலாக இருந்தால் வெட்டி விடவும்.

இப்பொழுது பவுச்சின் மேல் பகுதியை வெளியே கொண்டு வரவும். அனைத்து கார்னர்களையும் நன்றாக இழுத்து விடவும்.

உங்களுடைய ஸிப்பர் பவுச் ரெடி, சுலபமாக இருந்தது இல்லையா?

இப்பொழுது விதவிதமான அளவுகளிலும் துணிகளிலும் முயற்சி செய்யுங்கள். உங்கள் கற்பனை திறனுக்கு உயிர் கொடுங்கள்.